

தனி பிரதி ரூ.10/-

Single Copy Rs.10/-

ANNUAL SUBSCRIPTION Rs.120/-



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 50 | பாரிப்பு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2049 | பிப்ரவரி 2019 |
|---|---|---|---|
| KADHIR 50 | PAARIPPU 5 | THIRUVALLUVAR AANDU 2049 | FEBRUARY 2019 |


பேரறிஞர் அண்ணா



நினைவு நாள் 03.02.2019

"எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டாலும் ஏளனத்துக்கு ஆளானாலும் எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற திடசித்தமும் விடா முயற்சியும் இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும். தூற்றினோரே துதி பாடி நிற்பர்" ஏளனம் பேசினோரே ஏத்தி ஏத்தி தொழுவர்"


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**

CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org

email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் நா.புண்ணியகோட்டி உதவி செயற்பொறியாளர், அவர்கள் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், திருவள்ளூரில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் ஜெ.ஹரிஹரன், உதவி செயற்பொறியாளர், அவர்கள் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், பொன்னேரியில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



பொதுச் செயலாளர் மடல்

மடல் - 5 (2018 - 2019)



# தொடரும் நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் அல்லது அக்டோபர் மாதத்தில் முடிந்திருக்க வேண்டிய செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் விரைவில் முடிய இருக்கிறது. செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலைப் பொறுத்தவரையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் (தற்போது உதவி செயற்பொறியாளர்கள்) முதுநிலை பிரச்சினை முடிவடையாததாலும், அதில் சிலர் புதிதாக வழக்கு தொடுத்துள்ளதாலும் அவர்களை விட்டு விட்டு, அதற்கு முன்புவரை உள்ளவர்களுக்கு செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று முதன்மை செயலாளர் பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் (பொது) ஆகியோர்களுக்கு நாம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிப்ரவரி 15ம் தேதிக்குள் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் (தற்போது உதவி செயற்பொறியாளர்கள்) முதுநிலை தற்போது மீண்டும் ஒரு முறை மாற்றியமைக்க தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தில் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிய வருகிறது.

உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான ஆறு வழக்குகளை விசாரித்து தீர்ப்பை ஒத்தி வைத்த நீதியரசர் தீர்ப்பை வழங்காமல் மாற்றலாகி சென்று விட்டதால் மீண்டும் மறு விசாரணை நடத்த வேண்டியுள்ளதால் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதுமட்டுமல்லாமல் நமது வழக்கறிஞர்களின் அறிவுரையின் பேரில் சட்ட ரீதியாக மற்றுமொரு, விரைவில் முடியக்கூடிய முயற்சியையும் மேற்கொண்டு வருகிறோம். உதவி

செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் கடந்த 21 மாதங்களாக காலதாமதம் ஆகி வருவது அனைவருக்கும் மிகுந்த மனவருத்தத்தை அளிக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இந்த காலதாமதம் துறையின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதை வழக்கு தொடுத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளை உறுப்பினர் பொறியாளர் சு.கணேசமூர்த்தி உதவிப் பொறியாளர் அவர்கள் ஆண்டிப்பட்டி பாசனப்பிரிவில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



## Abstract

Public Services - Issuing of abatement orders / orders of dropping of action consequent on the death of the Government Servants / Pensioners against whom Departmental Disciplinary Proceedings / Tribunal for Disciplinary Proceedings / Criminal case is pending - simplifying the procedure - Orders - Issued.

**Personnel and Administrative Reforms (N) Department**

**G.O (Ms) No. 151** **Dated 31.10.2018**

**Read:**

1. Government Order (Ms) No. 2999, Public (Ser.B) Department, dated 04.12.1969.
2. Government Letter No. 30149/Per.N/91-4, Personnel and Administrative Reforms (N) Department, dated 23.12.1991.
3. Government Letter No. 4910/N/2010-1, Personnel and Administrative Reforms (N) Department, dated 21.10.2010.

**ORDER:**

In the Government Order first read above, orders were issued, among others, that on the death of the Government servant against whom disciplinary proceedings are pending, such proceedings shall abate eventhough such proceedings may be in the initial stage or nearing completion.

2. In the Government letter second read above, instructions were issued to the effect that the Departments of Secretariat may themselves issue abatement orders without consulting Personnel and Administrative Reforms department, in order to speed up the issue of such orders.

3. In the Government letter third read above, instructions were issued directing the Administrative departments / Heads of Departments to intimate the death of a Government servant, against whom criminal case is pending, to the Directorate of Vigilance and Anti-Corruption / Police Authority to enable it to move the Competent Court immediately, so as to issue slip proceedings by the Court.

4. The Heads of Departments are referring the matter to Government, even for the deceased subordinate service officials and abatement orders are being issued at Government level. Delays in some instances were noticed in the issuance of abatement orders which causes great hardship to the legal heirs of the deceased in getting the terminal benefits in time.

5. In the above circumstances, the Government, after detailed examination have decided to simplify the modalities in the issuance of abatement orders and hereby prescribe the following procedure:-

**i) In Department disciplinary cases including simultaneous disciplinary proceedings or Tribunal for Disciplinary Proceedings cases:-**

On receipt of death certificate, the disciplinary authority concerned shall take immediate action for issuing abatement orders and for the settlement of terminal benefits to the legal heirs of the deceased. A copy of such order shall be communicated to the Government / Heads of Departments for taking necessary action towards closing the order pending disciplinary cases, if any, at their end.

**ii) In Criminal cases:-**

On receipt of death certificate, in addition to following the procedure laid down in para 3 above, the disciplinary authority shall take immediate action to settle the terminal benefits to the legal heirs of the deceased, without waiting for the slip proceedings from the court. The slip proceedings whenever issued by the Court may be recorded.

6. All Departments of Secretariat and Heads of Departments are requested to follow the above instructions scrupulously in future and to issue necessary instructions to the subordinate offices under their control.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. SWARNA**
**SECRETARY TO GOVERNMENT**

---

**Abstract**

**FUNDAMENTAL RULES** - Tamil Nadu Leave Rules, 1933 - Incorporating the "Surrender of Earned Leave" as Rule 7A - Amendment - Issued.

**Personnel and Administrative Reforms (FRII) Department**

**G.O.(Ms) No. 166** **Dated: 03.12.2018**

**Read:**

1. G.O.Ms.No. 783, Finance Department, dated 10.09.1968.
2. G.O.(Ms) No.1089, Personnel and Administrative Reforms (FR -II) Department, dated 01.11.1980.
3. Government Letter No. 86904/81-1, Personnel and Administrative Reforms (FR - III) Department, dated 08.03.1982.
4. Government Letter No. 38745/82-1, Personnel and Administrative Reforms (FR - III) Department, dated 29.05.1982.
5. Government Letter No. 92550/82-1, Personnel and Administrative Reforms (FR - III) Department, dated 18.01.1983.
6. Government Letter No. 16216/83-1, Personnel and Administrative Reforms (FR - III) Department, dated 18.04.1983.

7. G.O.(Ms) No.211, Personnel and Administrative Reforms (FR -III) Department, dated 28.11.2001.
8. G.O.(Ms) No.138, Personnel and Administrative Reforms (FR -III) Department, dated 22.11.2002.
9. G.O.(Ms) No.351, Personnel and Administrative Reforms (FR -III) Department, dated 21.10.2004.
10. G.O.(Ms) No.19, Personnel and Administrative Reforms (FR -III) Department, dated 23.02.2006.

**ORDER:**

In the Government Order first read above, the Scheme of surrender of earned leave was in existence from 10.09.1968 as per the scheme of Kerala State. The Government servants are allowed to surrender 30 days of earned leave at in interval period of 24 months.

2. In the Government Order second read above, Government servants were permitted to surrender 15 days of earned leave annually / 30 days of Earned Leave biennial in lieu of cash allowance. In the Government Order seventh read above, the facility of surrender of Earned Leave was suspended initially for one year. In the Government order eighth read above the ban on the facility of surrender of earned leave as extended until further order. In the Government Order ninth read above, facility of surrender of Earned Leave for encashment was restored with effect from 24.04.2014. The Government Employees / Teachers were permitted to surrender 7 days of earned leave for encashment in a year as per the regular annual cycle. In the Government Order tenth read above, orders have been issued, permitting the Government Employees and Teachers to surrender 15 days of Earned Leave in a year in lieu of cash at their credit as per the regular cycle with effect from 08.02.2006. Therefore, periodical changes for surrender of earned leave have been made in the above said Government Orders. Therefore, there is no need to give date of effect for surrender of earned leave to these orders. As per the existing schemes, the following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the provision to Article 309, read with Article 313, of the Constitution of India and of all other powers hereunto enabling the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Tamil Nadu Leave Rules 1933 contained in Annexure - III to the Fundamental Rules.

2. The amendment hereby made shall come into force from the date of issue of order.

**AMENDMENT**

In the said Tamil Nadu Leave Rules, 1933, after rule 7, the following rule shall be inserted, namely:-

"7 A (i) A probationer or an approved probationer whether on duty or on leave other than extraordinary leave without allowance and un-earned leave on private affairs, may surrender earned leave at his credit for encashment.

ii. Requests in writing for surrender of earned leave indicating the date of surrender shall be made one month before or within one month after such date for surrender.

iii. The amount of earned leave surrendered under this rule shall not exceed 30 days with the interval of 24 months and shall not exceed 15 days with the interval of 12 months.

iv. The leave salary shall be paid at 1/30th of the monthly salary for each day of surrender irrespective of the number of days in the month of which the earned leave is surrenderd and whether the Government servant is on duty or on leave;

v. The total number of days of earned leave availed and the earned leave surrendered shall not exceed the maximum earned leave admissible to the Government servant concerned.

Note 1 - Entries regarding number of days surrendered, date of surrender and the debit from earned leave account shall be made in the service book of the Government servant concerned immediately after issue of orders by the drawing and disbursing officers.

Note 2 - The Government servants deputed on foreign service shall also be eligible for surrender of earned leave under this rule.

Note 3 - A Government servant whose suspension has been revoked and reinstated in service, may surrender earned leave under this rule on the eligible date, provided he,-

i. applies for surrender within one month from the date of receipt of order regulating the period of suspension, and

ii. has earned leave at his credit on the eligible date after regulating the period of suspension.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. SWARNA**
**SECRETARY TO GOVERNMENT**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2019 /நாள் 31.01.2019ன் படி 31.01.2019 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | K. குப்புசாமி | 19.01.1961 | உதவிப் பொறியாளர் |
| 2. | P. ராபின்சன் | 10.01.1961 | இளநிலைப் பொறியாளர் (மின்) |

**ஒம்/- ம. பக்தவத்சலம்**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம), தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

Government of Tamil Nadu
2019

MANUSCRIPT SERIES

## FINANCE (PENSION) DEPARTMENT

G.O.Ms.No.6, Dated 8th January 2019

(Vilambi, Margazhi-24, Thiruvalluvar Aandu 2049)

### ABSTRACT

**Pongal Festival, 2019** – Grant of Pongal Prize to 'C' and 'D' Group Pensioners / All Family Pensioners - Orders - Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.07, Finance (Pension) Department, dated: 08-01-2018.
2. G.O.Ms.No.5, Finance (Allowances) Department, dated : 08-01-2019.

**ORDER :**

The Government sanction a lumpsum Pongal Prize amount of Rs.500/-(Rupees Five Hundred only) to all Government Pensioners those who retired from the categories of 'C' and 'D' Group ('C' and 'D' Group of Scales of Pay (Ordinary Grade) is annexed to this order) including all 'C' and 'D' Group of Pensioners of Aided Educational Institutions, Local Bodies, Ex-Village Establishment (Ex-Village Officers and Village Servants / Assistants), ad-hoc Pensioners of all categories (Pensioners those who are drawing special pension of Rs.2,000/- with effect from 1-10-2017 i.e. Noon Meal Organisers, Anganwadi Workers, Mini Anganwadi Workers, Cooks, Cook Assistants, Anganwadi Helpers, Panchayat Secretaries, Village Librarian, Sweepers / Sanitary Workers / Scavengers, Plot Watchers, Anti-poaching Watchers, Police Station Cleaners, Ayah) and to all Family Pensioners irrespective of the Groups from which the Pensioners / Deceased Government employee had retired / died while in service.

2. This order shall also be applicable to all 'C' and 'D' Group provisional pensioners. The Pongal Prize amount shall not be admissible to those employees who retire on or after 08-01-2019 and to the families of those employees who die in harness on or after 08-01-2019.

3. Those who have retired / died in harness during the period from 01-10-2017 to 07-01-2019 are not eligible for the Pongal Prize amount if they are paid Adhoc Bonus as per the orders issued in the Government Order second read above. For this purpose, the Pension Disbursing Officers shall obtain non-drawal certificates from the departments concerned before making payment to these Pensioners.

4. This order is not applicable to the following categories of pensioners:-

(i) Special Pensioners such as Ulema Pensioners, State Freedom Fighters Pensioners and Social Pension for Scholars and Eminent persons, etc.

(ii) Family Pensioners who are appointed on compassionate grounds if adhoc bonus / special adhoc bonus is paid to them as applicable to the employees in service.

(iii) All Pensioners who retired from Group 'A' and 'B' posts including All India Service Officers and Officers governed by University Grants Commission (UGC) / All India Council for Technical Education (AICTE) / Indian Council of Agricultural Research (ICAR) Regulations.

5. The Government also direct that the procedure indicated below shall be followed for disbursement of Pongal Prize amount in respect of Pensioners / Family Pensioners coming under the Pension Pilot Scheme.

(i) In respect of those Pensioners / Family Pensioners to whom pension / family pension is sent by Money order at Government cost, the Pongal prize amount also shall be sent by Money Order at the Government cost.

(ii) In respect of Pensioners / Family Pensioners to whom pension / family pension is paid through Banks,

(a) In Pension Pay Office, Chennai and District Treasuries / Sub-Treasuries where the cheque system of payment of bills / Electronic Clearing System is in vogue, the Pension Pay Officer, Chennai and District Treasury Officers / Sub Treasury Officers are permitted to issue cheques and send the cheques to the respective paying branches of the bank with a covering list of Pensioners / Family Pensioners for crediting the amount to the pensioners' / family pensioners' savings bank account.

(b) As regards Banking Sub-Treasuries where the cheque system of payment of bills / Electronic Clearing System is not in vogue, the Sub-Treasury Officers are permitted to get Banker's cheque / Bank draft and send them to the respective Pensioners for crediting the amount to the pensioners' / family pensioners' savings bank account.

6. In respect of Pensioners / Family Pensioners coming under the Public Sector Bank Scheme, all Public Sector Banks are authorised to credit the lumpsum amount to the C & D pensioners to the pensioners' / family pensioners' account.

7. In respect of Pensioners / Family Pensioners for whom expenditure is met from State Consolidated Fund, the expenditure shall be debited to the following Head of Account:

"2071. Pensions and Other Retirement Benefits - 01. Civil – 800. Other Expenditure – State's Expenditure - AF. Pongal Prize to Pensioners and Family Pensioners - 27. Pensions - 09. Others (D.P.C. 2071 01 800 AF 2799)".

In respect of payment of Pongal Prize to Ex-Village Officers, the expenditure shall be debited to the following Head of Account:-

"2071. Pensions and Other Retirement Benefits – 01. Civil – 800. Other Expenditure – State's Expenditure – AK. Other Expenditure - Pongal Prize to Ex-Village Officers – 27. Pensions – 09. Others (D.P.C. 2071 01 800 AK 2799)"

8. In respect of Pensioners ('C' and 'D' Group) / Family Pensioners of Local Bodies for whom expenditure is met from the fund maintained by the Director of Local Fund Audit or Municipal Funds, as the case may be, the expenditure shall be met from the respective funds. In respect of Special Pensioners of Noon Meal Organisers, Anganwadi Workers, Mini Anganwadi Workers, Cooks, Cook Assistants and Anganwadi Helpers, the Block Development Officers / Child Development Project Officer concerned shall debit the expenditure under the head of account mentioned in para-7 above.

9. The Pongal Prize amount sanctioned above shall be paid to the eligible Pensioners / Family Pensioners and Ex-Village Officers immediately.

10. Necessary provisions have been made under the relevant head of account in Budget Estimate 2018-2019.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
**ADITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.இரவீந்திரன் இளநிலைப் பொறியாளர், அவர்கள் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு, திருவள்ளூரில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



Public Works Department
Secretariat
Chennai - 9.

**Letter No. 28839/G1/2018-2, dated 09.01.2019**

From

Thiru.S.K. Prabakar, I.A.S.,

Principal Secretary to Government

To

The Engineer-in-Chief (Building) and Chief Engineer (Building), Chennai Region, Public Works Department, Chennai - 5.
The Pay and Accounts Officer (East), Chennai - 8.
The Pay and Accounts Officer (North), Chennai - 79.
The Pay and Accounts Officer (South), Chennai - 35.
The Pay and Accounts Officer, Chennai - 9.
The Pay and Accounts Officer, High Court, Chennai - 104.
The Pay and Accounts Officer, Madurai.
All District Treasury Officers.

Sir,

Sub: Establishment - PWD - Building Organisation - Continuance of filled Temporary posts in 11 Circles, 52 Divisions etc., and office of the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai, Office of the Chief Engineer (Buildings), Public Works Department, Trichy Region, Trichy and Office of the Chief Engineer (Buildings), Public Works Department, Madurai Region, Madurai - Proposal sent to Government for Sanction - Pay Authorisation for January, 2019 - Requested - Reg.

Ref: 1. G.O.(Ms).No.122, Public Works (G1) Department, dated. 01.07.2016.
2. G.O.(Ms).No.175, Public Works (G1) Department, dated. 28.08.2017.
3. G.O.(Ms).No.5, Public Works (G1) Department, dated. 04.01.2018.
4. G.O.(Ms).No.31, Public Works (G1) Department, dated. 30.01.2018.
5. G.O.(Ms).No.38, Public Works (G1) Department, dated. 07.02.2018.
6. G.O.(Ms).No.58, Public Works (G1) Department, dated. 02.03.2018.
7. G.O.(Ms).No.156, Public Works (G1) Department, dated. 22.06.2018.
8. G.O.(Ms).No.217, Public Works (G1) Department, dated. 13.08.2018.
9. G.O.(Ms).No.261, Public Works (G1) Department, dated. 05.10.2018.
10. G.O.(Ms).No.318, Public Works (G1) Department, dated. 30.6.2018.

11. From the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai, Letter No. AEE/T10 /Asst.2/31813/2018, dt. 18.12.2018.

I am directed to state that in the Government Order first cited, orders were issued for further continuance of temporary posts (2554 posts) in all the 14 Circles, 50 Divisions and their Sub Divisions, Sections and in the office of the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai - 5, Office of the Chief Engineer (Buildings), Public Works Department, Trichy Region, Trichy and Office of the Chief Engineer (Buildings), Public Works Department, Madurai Region, Madurai, for a period from 01.01.2016 to 31.12.2016.

2. In the Government Order second cited, the sanction has been accorded for the further continuance of 1467 filled up temporary posts for the period from 01.01.2017 to 30.06.2018 in the buildings organization of Public Works Department instead of the 2554 total temporary posts.

3. In the Government Orders third to tenth cited, the sanction has been accorded for the further continuance of 126 temporary filled up posts from the date on which the posts are filled up to 30.06.2018 in addition to the 1467 filled up temporary posts for which further continuance accorded in the Government order second read above.

4. In his letter eleventh cited, the Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai has requested the Government to issue pay authorization for the 1593 temporary filled up posts for the month of January, 2019.

5. Pending issue of final orders for further continuance of Temporary Posts beyond 30.06.2018, I am directed to request you to admit and honour the pay bills of the incumbents of the 1593 temporary posts last continued in the Government orders cited, for the month of January, 2019, if they are otherwise found to be in order.

6. This letter issues with the concurrence of the Finance Department vide its U.O.No. 142/PW-I/2019, dated 08.01.2019.

Yours faithfully,

For Principal Secretary to Government

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளை உறுப்பினர் பொறியாளர் S.கார்த்திகேயன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்தை முன்னிட்டு ரூ.3000/- (மூன்று ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

## ABSTRACT

Establishment - Public Works Department - Continuance of temporary posts in the Division Establishment of Water Resources Department for a further period of three years from 1.1.2016 to 31.12.2018 - Sanctioned - Orders - Issued.

Public Works (F1) Department

**G.O (Ms) No. 04** **Dated: 08.01.2019**

**Vilambi, Maargazhi 24**

**Thiruvalluvar Aandu 2049**

**Read:**

1. G.O (Ms) No. 72, Public Works (F1) Department, dated 23.05.2013.
2. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai, Letter No. AEE/T1/AE1/Div.Cont/2015, dated 22.12.2015.
3. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chepauk, Chennai, Letter No. AEE/T1/AE-2/Div.Cont/2015, dated 24.08.2018.

**OEDER:**

In the G.O first read above, the Government accorded sanction for the further continuance of 4,560 temporary posts of various categories in 104 Divisions of Water Resources Department i.e in the Territorial, Functional and Special Divisions respectively, for a period of three years from 01.01.2013 to 31.12.2015.

2. Taking into account all the posting, transfer, promotion and redeployments orders subsequently, the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department has suumitted proposal for the further continuance of 3129 temporary posts beyond 31.12.2015, stating that those posts are in existence for more than thirty years and their requirement is absolutely essential for carrying out the irrigation works endowed upon the Water Resources Department. Out of 4,560 temporary posts continued earlier, the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department in his letter third cited has sought for further continuance for 3129 temporary posts only, as detailed below:-

| Sl No. | Details | Total posts |
|---|---|---|
| 1. | Temporary posts continued in G.O (Ms) No. 72, Public Works (F1) Department, dated 23.05.2013 | 4,560 |
| 2. | Number of posts erroneously included in G.O (Ms) No. 72, Public Works (F1) Department, dated 23.05.2013. (Blue Print Operator) | (-) 1 |
| 3. | Temporary posts surrendered. | (-) 59 |
| 4. | Temporary posts redeployed to Building wing of Public works Department, Cauvery Technical Cell. Project Circles, Thirunelveli and Office of the Project Director. Sand Quarry Operations, Chennai. | (-) 91 |
| 5. | Temporary posts kept vacant for more than 2 years | (-) 1280 |
| | **Temporary posts to be continued** | **3129** |

He has , therefore, requested orders of the Government for the further continuance of 3129 temporary posts in the Division Establishment of Water Resources Department for a further period of three years from 01.01.2016 to 31.12.2018.

3. The Government have examined the proposal of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department. Out of 4559 temporary posts in the Division Establishments of Water Resources Department, the Government accord sanction for the further continuance of 3129 (Three thousand one hundred and twenty nine posts only) various temporary posts in the Division Establishment of Water Resources Department viz. in the Territorial, Functional and Special Divisions as detailed in the Annexure to this order, for a further period of three years from 01.01.2016 to 31.12.2018, subject to the condition that the posts which were kept vacant for more than two years should be filled up only after obtaining the approval for revival of posts from the Government.

4. The incumbents of the posts sanctioned/further continued in this shall be eligible to draw Dearness Allowance and other usual allowance, besides pay as per the order in force.

5. This order issues with the concurrence of Finance Department - vide its U.O.No. 48097/PW.II/2018, dated 05.01.2019.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S.K. PRABAKAR**

**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

# தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு

## (Tamil Nadu Engineering Association, P.W.D.)

## நெஞ்சார்ந்த நன்றி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் 1910ல் துவங்கப்பட்டு 1928ல் அரசாணை எண். 822 Public (s) Dept. நாள். 27.9.1928ல் அங்கீகரிக்கப்பட்டது. இச்சங்கத்தின் மைய அமைப்பு பொதுப்பணித்துறை வளாகத்தில் இயங்கி வருகின்றது. இச்சங்கம் புதிய எண்.10, லால்முகமது வீதி, சேப்பாக்கம் என்ற விலாசத்தில் மூன்றடுக்கு கட்டிடத்தை கட்டி அதை பொறியியல் இல்லம் என்ற பெயர் வைத்து முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. முதல் தளத்தில் சுமார் 200 பேர் அமரக்கூடிய கூட்ட அரங்கிற்கு தியாகச் செம்மல் பொறிஞர் சி.ப.சண்முகம் அரங்கம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. பட்டயம் படித்து பொதுப்பணித்துறையில் பணியில் உள்ள பணியாளர்கள் அனைவரும் உறுப்பினராக சேர்ந்துள்ளார்கள். அவர்களின் நலன்களுக்காக இச்சங்கம் அயராது பாடுபட்டு வருவது மிகப் பெரிய தொண்டு என்றால் மிகையல்ல.

நான் 08.08.1958ல் அப்போதைய மேற்பார்வையாளர் பதவியில் முதன் முதலில் பணியில் சேர்ந்தேன். முதலில் சாத்தனூர் நீர்த்தேக்க திட்ட கால்வாய் கோட்டத்தில் சேர்ந்தேன். அப்போது என்னுடன் மூத்த பொறியாளர்கள் திரு.சீத்தாராமன் (தலைமைப் பொறியாளராக பணியாற்றி நிறைவு பெற்றவர்) திரு.கோ.ஏழுமலை (கண்காணிப்பு பொறியாளராக பணியாற்றி பணிநிறைவு பெற்றவர் மற்றும் முனைவர் பட்டம் பெற்று உலக வங்கியின் ஆலோசகராகவும் பணியாற்றியவர்) திரு.R.S.சுகவனேஸ்வரன் (நாடக நடிகர் திரு.R.S.மனோகர் அவர்களின் சகோதரர்) ஆகியோர் அக்கோட்டத்தில் பணிபுரிந்து எனக்கு பணியில் வழிகாட்டினார்கள்.

இச்சங்கம் ஒவ்வொரு கால கட்டத்திலும் டிப்ளமாப் பொறியாளர்களை பணியில் அமர்த்தவும், பதவி உயர்வின் 3:1 என்ற விகிதம் சரியாக கடைப்படிக்கப்பட்டு வருகின்றதை கண்காணிக்கவும் மிகவும் அரும்பாடுபட்டு வந்தது. தற்போது பல இன்னல்களுக்கிடையே விடாமுயற்சியுடன் தன் பணியை தொடருவது நாம் பெற்ற பேறு என்றால் மிகையல்ல.

1960ல் MPSC மூலம் நடத்தப்பட்ட தேர்வில் டிப்ளமா பொறியாளர் வரிசையில் 5 ஆவது இடம் பெற்றேன். 1958 முதல் 1981 வரையில் (சுமார் 23 வருடங்கள்) மேற்பார்வையாளர் / இளநிலைப் பொறியாளர் பதவியில் பணி செய்து மருத்துவ விடுப்பில் 1.4.1981 முதல் சென்றிருந்தேன். வேறு இடம் மாற்றல் பெறுவதற்காக சென்னைக்கு வந்தேன். எனக்கு இது போன்ற சந்தர்ப்பங்களில் மிகவும் உதவி செய்தவர் அமரர் கு.ஜானகிராமன் (இவருக்கு சொந்தமான லால் முகமது வீதியில் உள்ள கட்டடத்தை நமது TNEAக்கு சலுகை விலையில் விற்றவர்) அவர்களை சந்திக்க முன்கூட்டியே சேப்பாக்கம் அலுவலகம் சென்றிருந்தேன். Notice போர்டில் உள்ளவற்றை பார்த்த பொழுது எனக்கு உதவி செயற்பொறியாளராக அரசின் பின்னேற்பினை எதிர்பார்த்து பதவி உயர்வு அளித்தது தெரிந்தது. அப்போது தமிழகமே வறட்சியில் பாதிக்கப்பட்ட நிலையில் அப்போதைய சிறிய பாசனங்கள் தலைமைப் பொறியாளர் அமரர் பொறிஞர் S.J. அம்புரோஸ் அவர்கள் அப்போதைய செயலரைச் சந்தித்து விளக்கி வேண்டிய வறட்சி நிவாரணப் பணிகள்

செயல்படுத்துவதற்காக 200 புதிய பதவிகள் மற்றும் பதவி உயர்வுக்கான ஆணையை பெற்றதாக அறிந்தேன்.

அப்போது தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொபது) முயற்சி செய்ததின் பயனாக பட்டப் பொறியாளர்கள், பட்டயப் பொறியாளர்கள் 3:1 என்ற விகிதாச்சாரத்தின் படி பதவி உயர்வு அளித்ததுடன் முதுநிலையிலும் 3 பட்டம் பொறியாளர்கள் 1 பட்டயப் பொறியாளர் என்ற விகிதத்தினையும் பின்பற்றி அரசாணை வெளியிட்டது. இம்மாபெரும் சேவையை அப்போது தமிழ்நாடு பொறியியல் சங்கம் செய்ததால் நான் எந்தவிதமான முயற்சியும் செய்யாமல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றேன். அதற்கு அப்போது பணியில் இருந்த மூத்தப் பொறியாளர் திரு.C.A.ஸ்ரீனிவாசன், திரு.S.J.அம்புரோஸ் மற்றும் அப்போதைய பொபது அரசு செயலாளர் தான் விதிகளின்படியும், நியாயப்படியும் மனசாட்சியின் படியும் ஆணை வழங்கினார்கள்.

அவ்வாறு பதவி உயர்வு பெற்று 29.05.1981ல் வறட்சி நிவாரணப் பணிகள் உட்கோட்டத்தில் பணி செய்து 07.12.1981 முதல் 24.04.1984 பணியில் திருச்செங்கோடு உட்கோட்ட உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்தேன். அந்த காலத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால நடவடிக்கை போல் செயல்படுத்தியதால் அப்போதைய சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு R.வரதராஜீலு IAS அவர்கள் ஒரு அருமையான சான்றினை எனக்கு அளித்தது நான் பெற்றபேறு. அந்த அனுபவத்தால் தான் திரு அந்தோணி IAS வறட்சி நிவாரணப் பணிகளின் ஆணையர் அவர்களிடம் விளக்கியதால் அவர் வழங்கிய சுற்றறிக்கையை திரும்பப் பெற்றார்.

நான் சாதாரணமானவன் என்னை தமிழ்நாடு பொறியியல் சங்கம் பதவி உயர்விற்கு உயர்த்தியதால்தான் பல IAS அலுவலர்கள் மேற்கு வங்க மாநில மாண்புமிகு ஆளுநர் புகழ்மிகு கோபால கிருஷ்ணகாந்தி IAS அவர்களிடமும் திரு.K.S. ஸ்ரீ பூபதி IAS தலைமைச் செயலாளர் அவர்களிடமும் தியாகி திருமிகு லட்சுமிகாந்தன் பாரதி IAS ஆகியவர்களிடம் வாழ்த்துகள் பெறவும் முடிந்தது.

தமிழ்நாடு பொறியியல் சங்கமும், தமிழ்நாடு டிப்ளமா பொறியாளர்கள் பேரவையும் இணைந்து முயற்சி செய்து பகுதி நேர பொறியியல் பட்டக் கல்வியினை 1971ல் அரசு ஆணை மூலம் பெற்றது. அதனால் பல லட்சம் பேர் பகுதி நேர பொறியியல் பட்டம் பெற்றனர். பல்லாயிரக்கணக்கானோர் முதுநிலை பொறியியல் பட்டம் பெற்றார்கள். நூற்றுக்கணக்கானோர் முனைவர் பட்டம் பெற்றனர். மூவர் பல்கலைக்கழக துணை வேந்தர்களாக பொறுப்பேற்றனர்.

1. முனைவர் திரு.நல்இராமச்சந்திரன், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்
2. முனைவர் திரு.எஸ்.காளியப்பன், திருநெல்வேலி அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம்.
3. முனைவர் திரு.முருகேசன், மதுரை, அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம்.

ஆகவே முக்கியமாக தமிழ்நாடு பொறியியல் சங்கம் பெற்றுத் தந்த பகுதிநேர பொறியியல் பட்டப்படிப்பை கற்றவர்கள் எல்லா வகையிலும் பயன்பெற்றவர்கள் கடைசி வரை சங்கங்களுக்கு நன்றியோடு இருக்க வேண்டும்.

நான் சார்ந்த REAT, DECT போன்ற சங்கங்கள் மூலம் மலர்க்குழு தலைவர், பொறிஞர் சி.இராமசாமி அவர்கள் தயாரித்த 22 மலர்கள் வெளியிட்டோம். சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி அவர்களின் நூற்றாண்டு விழா, மலர், கூடம், சிலை வழங்குதல் ஆகியவற்றை சிறப்பாக செய்ய முடிந்தது. இதற்கெல்லாம் தமிழ்நாடு

பொறியியல் சங்கத்தின் வழிகாட்டுதலே காரணம் என்றால் மிகையல்ல. ஆகவே என்றும் இச்சங்கத்திற்கு நான் நன்றியோடு இருப்பேன்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

ஆகவே எனது நன்றியை வெளிப்படுத்தும் வகையில் நமது பொறியியல் இல்லம் புனரமைப்பு பணிக்காக ரூ. 1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) நன்கொடையாக நான் தனிப்பட்ட முறையில் அளிப்பதை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



அன்புடன்

ம.பலராமன், செயற்குழு உறுப்பினர் I.O.A 1568,
உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) பொபது,
தலைவர், REAT & DECT சேலம் கிளைகள்,
115, ராஜா நகர், அஸ்தம்பட்டி, சேலம் - 636 007
அலைபேசி: 94863 40416.

## துறையிலிருந்து விடை பெறுகிறேன்

பொறி.மௌ.குலாம் முகமது பாஷா, டி.சி.இ.,
உதவி செயற்பொறியாளர்,
தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீஆது,
கோவை மண்டலம், கோயம்புத்தூர்.
செல்: 94434 23202.



அன்பு நண்பர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பொள்ளாச்சி நகரில் எளிய குடும்பத்தில் பிறந்து அப்பொருளாதாரத்திற்கேற்ப அந்நகரின் நகராட்சி நடுநிலைப்பள்ளியான வி.எஸ்.ஆர்.ஏ நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை தமிழில் படித்தேன். தலைசிறந்த பொறியாளர்களை உருவாக்கிய நாச்சிமுத்து பாலிடெக்னிக்கில் தொழில்நுட்ப பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு முதல் பதினொன்றாம் வகுப்பு படித்தேன். பின்னர் அதே பாலிடெக்னிக்கில் டிப்ளமா சிவில் எஞ்சினியரிங் படித்து 1980 ஆம் ஆண்டு பட்டயம் பெற்று வெளியேறினேன்.

ஆரம்பத்தில் நெடுஞ்சாலைத்துறை வரவேற்று தொழில்நுட்ப உதவியாளராக பணி அளித்து அடைக்கலம் தந்தது. பின்னர் ஊராட்சி ஒன்றியம் பணி அளித்தது. ஓராண்டு கழிந்த நிலையில் நெடுஞ்சாலைத்துறையில் வரைவாளராக அரசுப் பணியில் 1981 ஆம் ஆண்டில் சேர்ந்தேன். சுமார் ஐந்து ஆண்டு பணி காலத்தில் ஆறு ஊர்களுக்கு மாறுதலாகி ஆறாவது ஊரில் மூன்று ஆண்டுகள் பணி புரிந்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் பொதுப்பணித்துறையில் இளம் பொறியாளராக தேர்வு செய்யப்பட்டு 05.05.1986 அன்று ஆரணி ஏரிகள் நவீனப்படுத்தும் பிரிவில் பணியேற்றேன். முப்பத்தாறு மாதங்களில் பணிமாறுதல் என்ற நிலையில் முப்பத்தைந்து மாதத்திலேயே பணி மாறுதலில் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம், மூங்கில்துறைப்பட்டு சாத்தனூர் சிறப்பு திட்ட உபகோட்ட பிரிவில் 1989ல் பணியேற்றேன். மிகச் சிறந்த பொறியாளர்களின் பங்கேற்புடன் சிறப்பான பணிகளை மேற்கொண்டேன்.

விவசாயம் என்ன என்று அறியாத பின்னணியில் வந்த படியால் கட்டடத்துறை பக்கம் செல்ல கிடைத்த வாய்ப்பான தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத்தில் அயற்பணியில் 1992ல் பணி மாறுதலில் நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் பணியேற்றேன். நான்கு ஆண்டுகள் தேயிலை தொழிற்சாலை, சாலைகள், மருத்துவமனை, குடியிருப்பு கட்டுமான பணிகளை நிறைவு செய்து துறைக்கு திரும்பினேன்.

பாசன கட்டுமானம் பற்றி அறிந்து கொள்ள 1996 ஆம் ஆண்டு பழநி திட்டம் மற்றும் வடிவமைப்பு பிரிவில் பணியேற்று இரண்டு ஆண்டுகள் பணி புரிந்து 1998 ஆம் ஆண்டு பணி மாறுதலில் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் சாத்தனூர் வலது புறக்கால்வாய் பராமரிப்பு பாசன பிரிவில் பணியேற்றேன். ஐந்தாண்டுகள் பணி புரிந்து 2003 ஆம் ஆண்டு சாத்தனூர் அணை பிரிவில் பணியேற்றேன். மூன்று ஆண்டுகள் பணி புரிந்த பின் 2006 ஆம் ஆண்டு மூங்கில்துறைப்பட்டு சாத்தனூர் வலது புறக்கால்வாய் பாசன பராமரிப்பு பிரிவில் பணியேற்றேன்.

ஆறு ஆண்டுகள் பணிபுரிந்து 2012 ஆம் ஆண்டு பதவி உயர்வில் உதவி செயற்பொறியாளராக அறந்தாங்கி சிறப்பு திட்ட உபகோட்டத்தில் பணியேற்றேன். ஓராண்டு காலத்தில் அந்த உபகோட்டம் மூடப்பட்டதால் காவிரி டெல்டா பொறையார் உபகோட்டத்தில் 2014 ஆம் ஆண்டு பணியேற்று 2017 ஆம் ஆண்டு முடிய பணியாற்றினேன். 2017 ஆம் ஆண்டு பணிமாறுதலில் கோயம்புத்தூர் நீர்வள ஆதாரத்துறை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பணியேற்று ஜனவரி 2019ல் பணிஓய்வு பெறுகிறேன்.

எனது பணிக்காலத்தில் என்னுடன் பணி புரிந்து என்னை வழி நடத்திய மூத்த பொறியாளர்களை இந்த நற்தருணத்தில் நினைவு கூர்ந்து நன்றி கூறிக் கொள்கிறேன். என்னுடன் பணியாற்றி நல் ஒத்துழைப்பு நல்கிய சகோதரப் பொறியாளர்களுக்கும் என் பணியமர்தலிலிருந்து பதவி உயர்வு வரையிலும் மட்டுமின்றி பணி ஓய்வு வரை என் நெஞ்சில் நினைவு இருக்கும் வரை உடன் இருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் மற்றும் முன்னாள் மற்றும் இந்நாள் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிய வணக்கம்

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளை உறுப்பினர் பொறியாளர் S.கருப்பையா இளநிலைப் பொறியாளர், காரைக்குடி உபகோட்டம் அவர்கள் 13.01.2019 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் வடக்கு மண்டல செயலாளர் பொறியாளர் G.சிவக்குமார் உதவிச் செயற்பொறியாளர் அவர்களின் தந்தையார் திரு. V.கோபாலன் அவர்கள் 11.01.2019 அன்று நாகை மாவட்டம் சீர்காழியில் இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் S.நாகராஜன் உதவிப் பொறியாளர், கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வடக்கு பிரிவு, தஞ்சாவூர் அவர்கள் 31.01.2019 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# விடை பெறுகிறேன்



மு.ஜவஹர் கிருபாகரன்
உதவி செயற்பொறியாளர், (ஓய்வு)
எண்.3, ALC வளாகம்,
மால்பட்டினபாக்கம் - 607 104.
செல்: 94434 79805.

அன்பும், பாசமும் நிறைந்த சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்.

தொழில் நுட்ப உதவியாளராக 17.06.1983 அன்று பொதுப்பணித்துறையில் பணியில் சேர்ந்த நான் 30.11.2018 அன்று உதவி செயற்பொறியாளராக பணிநிறைவு செய்ய கருணை புரிந்த இறைவனுக்கு நன்றிகளை காணிக்கையாக்குகிறேன்.

எனது பணிக்காலத்தில் எனது உயர் அதிகாரிகள், பணியாளர்கள், பொறியாளர்கள், தினக்கூலி பணியாளர்கள் அனைவருக்கும் எனது அன்பான நன்றிகள்.

மேலும் இதுநாள் வரையில் வாழ்க்கையில் எந்த குறைகளும் இல்லாமல் பணியாற்ற உதவிய அனைத்து பொறியாளர்கள், நண்பர்கள், உறவினர்கள், மேலதிகாரிகள், பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

தங்கள் அன்புள்ள
**மு.ஜவஹர் கிருபாகரன்**
உதவி செயற்பொறியாளர், (ஓய்வு)

# பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 44 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.01.2019)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | R. செல்வராஜ் | தலைமைப் பொறியாளர் |
| 2. | K.R. குமாரி ஷீலா | சிறப்புத் தலைமைப்பொறியாளர் |
| 3. | R. சுப்பிரமணியன் | இணைத் தலைமைப் பொறியாளர் |
| 4. | T. தன்சிங்கராஜன் | செயற்பொறியாளர் |
| 5. | M. குலாம் முகமது பாஷா | உதவி செயற்பொறியாளர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

எஸ்.கே. பிரபாகர்
அரசு முதன்மைச் செயலாளர்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீ விளம்பி வருடம், மாசி மாதம் 5-ம் நாள் (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை திரயோதசி திதியும், புணர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 08.00 மணிக்குமேல் 09.30 மணிக்குள் மீன லக்னத்தில் அமைந்த சுப வேளையில்



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், எருமியாம்பட்டி
ஊமையக்கவுண்டர் - சின்னம்மாள் அவர்களின் மகன்வழிப் பேத்தியும்,
அரூர் வட்டம், சோரியம்பட்டி, சின்னசாமி - யசோதா அவர்களின்
மகள்வழிப் பேத்தியும், நகுலன் - ரேவதி அவர்களின்
புதல்வியுமாகிய கண்ணங்குல திருநிறைச்செல்வி



**Er. N. தீபிகா** B.E., M.Tech

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டி
தெய்வத்திரு. சென்னகிருஷ்ணன் - குப்பம்மாள் மகன்வழிப் பேரனும்,
K.வெள்ளாளப்பட்டி தெய்வத்திருவாளர்கள், வெள்ளைய கவுண்டர் -
ருக்கம்மாள் மகள்வழிப் பேரனும், குணசேகரன் - கற்பகம்
ஆகியோரது குமாரனுமாகிய கண்ணந்தை குல திருநிறைச்செல்வன்

**Dr. G. பிரவீன்குமார்** M.B.B.S., DNB., (Anaesthesia)
(Ganga Hospitals, Coimbatore)

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் **அரூர், பைபாஸ் சாலையில் உள்ள N.N மஹாலில்** நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள



**U. நகுலன்** B.E., AEE, PWD - **N. ரேவதி,** அரூர்
செல்: 98424 09592.
**N. சிலம்பரசன்**B.E., Addl, S.P., - **N. திவ்யா** B.E., திருவள்ளூர்
மழலைகள்: **S. இனியமுதன், S. இளந்தீரன்**
**C. ரவீந்திரன் - R. இந்துமதி**
**C. மகேந்திரன் - M. ஆனந்தி**
(Universal Group of Companies, காரைக்கால்)
**O. இராமச்சந்திரன் - R. சுமதி,** எருமியாம்பட்டி
**O. நாகராஜன், K. தேன்மொழி,** தலைமையாசிரியர்,

Sivamayam

Sri Muthu Irulayi Amman Thunai     Sri Shenbagavalli Amman Thunai

# *Wedding Invitation*

**"Marriage are settled in heaven but celebrated on earth;**
**The unity of two unknown souls is written right from birth"**

**Mr. S. Karthikeyan B.E., & Mrs. K. Sharmiladevi B.Com.,**

(Assistant Executive Engineer, PWD,
Thiruvadanai, Cell:94439 05028)

request the honour of your presence to grace the marriage of our beloved daughter

Sowbagyawathi. **K. Shenbaga M.E.,**

with

Chiranjeevi. **E. RajaRajan B.E., M.B.A.,PGD**

(Piping Engineering)

**Regional Construction Manager, Mitsubishi Heavy Industries, Yokohama, Japan**

**(S/o. R.Ilangovan B.A.,B.L., (Former Deputy Director, Thirunelveli Corporation) & E. Sundaralakshmi)**

on Sunday, the 24th February 2019 between 7.45 a.m and 9.20a.m.

**PRASANNA MAHAL**

Trichy Main Road, Paari Nagar, Karaikudi - 630 002.

**Betrothal: 23.02.2019 - Saturday 6.00 p.m. Onwards**

with best compliments from

Near and Dears



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.உதயகுமார் உதவி செயற்பொறியாளர், அவர்கள் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், பூவிருந்தவல்லியில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளையின் செயலாளர் பொறியாளர் எஸ்.மயில்வாகனன், உதவிப்பொறியாளர், 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு கோட்டம் அவர்கள் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் கால்வாய் வெள்ளோட்ட பணிகளை சிறந்த முறையில் செய்தமைக்காக மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

FEBRUARY 2019

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தேனி கிளையின் தலைவர் பொறியாளர் கே.சுந்தரப்பன் செயற்பொறியாளர், 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு கோட்டம் அவர்கள் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், 58 கிராமங்களுக்கு பாசன வசதியளிக்கும் கால்வாய் வெள்ளோட்ட பணிகளை சிறந்த முறையில் செய்தமைக்காக மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
09.02.2019

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,